**கவனிக்க.-** *2009.10.09 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1624 - 2009 ඔක්තෝබර් 16 වැනි සිකුරාදා - 2009.10.16**

*1624 ஆம் இலக்கம் – 2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 1400 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1401 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை – நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2009, ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந்தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - கேகாலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாயும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, கார்த்திகை மாதம் 13 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2009, புரட்டாதி 16.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கேகாலை | கேகாலை | கேகாலை நகரப் பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கேகாலை. |

10-429

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## VI ஆம் தர சமுர்த்தி முகாமையாளர்களை V ஆம் தரத்துக்குப் பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை - 2009

1. இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் முகாமையாளர்களை 06 வருட சேவைக்காலத்தினைக் கொண்டுள்ள VI ஆம் தர சமுர்த்தி முகாமையாளர்களை V ஆம் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2009, திசெம்பர் மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படும்.

2. இப்பரீட்சை 03 வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

**2.1 நுண்ணறிவும் பொது விவேகமும் .-** இது பரீட்சார்த்திகள் விளங்கிக்கொள்ளும் ஆற்றலையும் தர்க்கரீதியான விவேகத்தினையும் உடனடியாக சிந்திக்கும் ஆற்றலையும் பற்றிக் கண்டறியும் ஒரு வினாத்தாளாகும்.

* புள்ளிகள் : 100
* நேரம் : 1 1/2 மணித்தியாலம்
* சித்தி பெறும் பொருட்டு பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் 40 ஆகும்.

**2.2 கமநெகும மற்றும் சமுர்த்தி விடயம் பற்றிய அறிவு.-**இதற்குரிய வினாத்தாள் சில பகுதிகளைக்கொண்டதாக (A, B, C, D மற்றும் E என்ற வகையில்) நடாத்தப்பட வேண்டியதுடன் வினாத்தாளின் முதலாவது பகுதி சகல சமுர்த்தி முகாமையாளர்களும் பொதுவாக விடையளிக்கக்கூடிய சமுர்த்தி வேலைத்திட்டமும் கமநெகும வேலைத்திட்டத்துடன் சார்ந்த பொது விடயங்களும் உள்ளடங்கியதாக தயாரிக்கப்பட்ட ஒரு வினாத்தாளாகும்.

வினாத்தாளின் ஏனைய பகுதிகள் தெரிவு செய்து விடையளிக்கக் கூடிய விதத்தில் இருக்க வேண்டியதுடன் அந்த ஒவ்வொரு பகுதியும் வங்கிச்சங்க, மகாசங்க முகாமையாளர்கள், கருத்திட்ட முகாமையாளர்கள், தலைமையக முகாமையாளர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களிலுள்ள முகாமையாளர்கள் மற்றும் தலைமை அலுவலக முகாமையாளர்களுக்கு அவர்கள் மேற்கொள்கின்ற அலுவல்களையும் விடய அறிவினையும் சார்ந்ததாக தயாரிக்கப்பட்ட ஒரு வினாத்தாளாகும்.

* புள்ளிகள் 100
* நேரம் 1 1/2 மணித்தியாலம்
* சித்திபெறும் பொருட்டு பெற வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் 40 ஆகும்.

**2.3 நிதிப் பிரமாணங்கள், தாபனக்கோவைகள் மற்றும் ஏனைய குறித்த நகல் பற்றிய அறிவும் பொது அறிவும் பற்றிய வினாத்தாள்:-**

இது தாபனக்கோவை, நிதிப்பிரமாணங்கள் மற்றும் குறித்த நகல்களில் தெரிவு செய்யப்பட்ட அத்தியாயங்கள் பற்றி முகாமை யாளர்களின் பொது அறிவை அளவிடும் வினாத்தாளொன்றாகும். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட அத்தியாயங்களில் தாபனக்கோவையின் I, II, III, IV, VII, XII, XIV, XV, XXV அத்தியாயங்களும் நிதிப்பிரமாணத்தில் I, II, III, XIII ஆகிய அத்தியாயங்களும் உள்ளடங்குதல் வேண்டும்.

* புள்ளிகள் 100
* நேரம் 1 1/2 மணித்தியாலம்
* சித்தி பெறும் பொருட்டு பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் 40 ஆகும்.

3. இப்பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரம் நடைபெறும். இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப் படிவமொன்று இந்த அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். A4 அளவிலான தாள்களில் மட்டுமே விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படவேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 1.0 தொடக்கம் 4.0 வரை முதலாம் பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாம் பக்கத்திலும் அமையும் விதத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதற்குரிய தகவல்களை தங்களது கையெழுத்தினாலேயே தெளிவாக பூரணப்படுத்துதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ற விதத்தில் அமையாத விண்ணப்பப்படிவங்களும் பூரணமில்லாத விதத்தில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அவ் விண்ணப்பப் படிவத்தின் போட்டோப் பிரதியொன்றினை தங்களிடம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அங்கு தலைப்பு குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

4. விண்ணப்பப்படிவங்களை தங்களது பிரிவுத்தலைவரின் ஊடாக (மாவட்ட செயலாளர்/ பிரதேச செயலாளர்) பிரிவுகளில் இணைக்கப்பட்டிருப்பின் அதனை மாவட்ட செயலாளர்/மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்/பிரதேச செயலாளர்கள்/பிரதி சமுர்த்தி பணிப்பாளர்கள் ஊடாக) 2009.11.13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிப்பிரிவு, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கப் பட்டவுடனேயே அது தொடர்பில் பத்திரிகை அறிவித்தலில் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கழிந்ததன் பின்னர் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிடின், அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடம் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியினையும், பதிவு செய்த பற்றுச்சீட்டினையும் கொழும்புக்கு தூரமான பிரதேசம் ஒன்றாயின் அனுமதி அட்டையை அனுப்பும் பொருட்டு தொலைநகல் இலக்கம் ஒன்றினையும் குறிப்பிட்டு உங்களது கோரிக்கைக் கடிதத்தினையும் இணைத்து வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகப்பயனுள்ளதாகும்.

6. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பாடங்களுக்கும் மண்டப அதிபதி திருப்திப்படக்கூடிய வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(2) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட் அனுமதிப்பத்திரம்).

7. பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சைக்கான விணப்பதாரிகள் உட்படுவர் அந்த சட்ட விதிகள் மீறப்பட்டால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உள்ளாக வேண்டிவரும். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதிகளை கொண்டுள்ளதற்கு அங்கீகாரமாக கருதலாகாது.

8. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பித்துள்ள சகலருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும் என்பதுடன் அவர்களுக்கு தங்களது அலுவலகத் தலைவரினால் உத்தியோக விடுமுறை வழங்கப்படல் வேண்டும். பரீட்சை நடைபெறும் தினத்தன்று தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதிப்பத்திரத்தினை மண்டப அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

9. இந்த விதிமுறைகளுக்குள் உட்படாத ஏதேனும் விடய மொன்றிருப்பின், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை பணிப்பாளர் சபையின் விருப்பத்தின் பிரகாரம் அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஆர். பீ. பி. திலகசிரி,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை,
4 ஆம் மாடி, செத்சிரிபாய,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**VI ஆம் தர சமுர்த்தி முகாமையாளர்களை V ஆவது தரத்திற்கு பதவி உயர்த்துவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2009**

Competitive Examination for Grade VI Samurdhi Managers to Promote to Grade V - 2009

☐

(அலுவலக உபயோகத்துக்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

1. பெயர் :-
   1.1 முதலெழுத்துக்கள் இறுதியாக வரும் விதத்தில் முதலெழுத் துக்களுடன் பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :--. (உதா.: SILVA A. B.)
   1.2 முழுப்பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) : -----.
   1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2. அலுவலக முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----. (அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்).
   2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

3. பெண்/ஆண் :
   3.1 பால் :
   பெண் - 1, ஆண் - 0 ☐
   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)
   3.2 விவாகமானவரா/விவாகமாகாதவரா :
   விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2 ☐
   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)
   3.3 பிறந்த திகதி :

   ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

   3.4 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தன்று வயது :

   வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4. தேசிய அடையாள அட்டை இல.:
   ☐☐☐☐☐☐☐☐☐☐

5. பதவியும் தரமும் :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவை எனவும் விண்ணப்பித்துள்ள மொழியில் பரீட்சைக்குத் தோற்ற உரிமையுள்ளது எனவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற

சட்டதிட்டங்களுக்கு இசைவதாகவும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

சமர்ப்பிக்கின்றேன்.

மேலே விபரங்களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிக்கு இப்பரீட்சையில் தோற்றுவதற்குத் தகுதியுள்ளது எனவும் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியுள்ளவர் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
பிரிவு/மாவட்டத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயரும் உத்தியோக முத்திரையும்.

திகதி :-----.

10-438

---

## அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2009

1. அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இன் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமைகளைக் கொண்ட இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கமைய திறமை அடிப்படையில் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள், மாவட்ட சனத்தொகை விகிதாசார அடிப்படையில் அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இன் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்காக தெரிவு செய்யப்படுவர்.

3. நியமிக்கப்படவுள்ள எண்ணிக்கையும் நியமனம் செயல்வலுப் பெறும் திகதியும் நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். பதவி வெற்றிடங்களில் ஏதாவது எண்ணிக்கையை அல்லது எல்லாவற்றையும் நிரப்பாது விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

4. **சம்பளம்**.- 2007.08.24 ஆந் திகதிய 06/2006 (IV) ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்புகள் III, II மற்றும் I ஆகியவற்றுக்கு ஏற்புடையதான மாதச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 13,990 - 10 × 145 - 11 × 760 - 6 × 240 - 14 × 320 - ரூபா 23,230 ஆகும். ரூபா 15,440 ஐ கடந்து செல்வதற்காக வகுப்பு II இற்கான தரம் உயர்வும் ரூபா 17,310 ஐ கடந்து செல்வதற்காக வகுப்பு I இற்கான தரம் உயர்வும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

5. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும்.

6. **தகைமைகள்**.- அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும்.

(அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;
(இ) நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் ;
(ஈ) பின் குறிப்பிடப்படும் கல்வித் தகைமைகள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(1) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி அத்துடன் கணிதம் அடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரு அமர்வில் கல்வி பொது தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தலும் அத்துடன்

(2) கல்வி பொது தராதர (உயர் தர) பரீட்சையில் சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த எல்லா பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தலும்.
(பழைய பாட விதானத்தின் கீழ் ஒரு அமர்வில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.)

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பதவிக்குரிய எல்லாத் தகைமைகளையும் 2009 நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

7. மாவட்ட சனத்தொகை விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்தல்.

(அ) சேவைக்கான ஆட்சேர்ப்பு பிரதிநிதித்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தின் சனத்தொகை எண்ணிக்கைக்கு விகிதசமமாகவும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 15/90 இற்கு ஏற்புடையதாகவும் அந்தந்த மாவட்டத்திற்கான வெற்றிட எண்ணிக்கையில் இருந்து குறிப்பிட்ட ஒரு தொகை ஒதுக்கப்படும். ஏதேனும் ஒரு மாவட்டத்திலிருந்து நிரப்பப்பட வேண்டிய வெற்றிட எண்ணிக்கைக்காக அம் மாவட்டத்தில் விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் மட்டுமே போட்டியிட தகைமையுடையவர்களாவார் :-

(i) ஏதேனுமொரு மாவட்டத்திற்கு மேற்குறிப்பிட்டள்ளவாறு ஒதுக்கப்பட்ட வெற்றிட எண்ணிக்கை அம்மாவட்டத்திற்கு உள்வாங்கப்படாவிட்டால் குறித்த வெற்றிட எண்ணிக்கை மாகாணத்தினுள் அண்மித்திருக்கும் மாவட்டங்களுக்கு மீளப் பகிரப்படும்.

(ii) நியமனம் செய்வதற்குள்ள மொத்தப் பதவி எண்ணிக்கை சிறிய எண்ணிக்கையாக இருப்பின் அக்காரணத்தின் பேரில் மாவட்ட சனத்தொகை எண்ணிக்கையை அடிப்படையாக கொள்ள முடியாதவிடத்து திறமை ஒழுங்கின்படி தகைமை பெற்றவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

(iii) பரீட்சையில் அவசியப்படும் ஆகக் குறைந்த புள்ளிகளை பெற்றவர்களின் எண்ணிக்கையானது நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கையைவிட குறையுமிடத்து மாவட்ட சனத்தொகை எண்ணிக்கை அடிப்படையின் பேரில் தெரிவுகள் செய்யப்பட மாட்டாது.

(ஆ) ஒரு மாவட்டத்தை சேர்ந்தவராக இருப்பதற்கு இருக்க வேண்டிய தகைமைகள் ஒரு மாவட்டத்தின் வெற்றிடங்களுக்காக போட்டியிடுவதாயின் பின்வரும் விடயங்களுள் ஒன்றையாவது பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(i) பரீட்சார்த்தி அம் மாவட்டத்தில் பிறந்தவராக இருத்தல் வேண்டும். அல்லது

(ii) பரீட்சைக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்யவேண்டிய இறுதித் திகதிக்கு உடன் முந்திய 05 வருட காலங்களில் அவர் அம் மாவட்டத்தில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்களாவது தொடர்ந்து நிரந்தரமாக குடியிருப்பவராக இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால்

(iii) அவர் தொடர்ந்து 5 வருடங்கள் அம்மாவட்டத்தில் தனது இரண்டாம் நிலை பாடசாலை கல்வி கற்றவராக இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர்கள் மேற் போந்த (ஆ) (ii) இன் கீழ் தமக்குரிய மாவட்டத்தை நிரூபிப்பதற்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய 03 வருட கால வாக்காளர் இடாப்பு பட்டியல்கள் மற்றும் பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழை சமர்ப்பிக்க கட்டுப்பாடுடையவர்கள் ஆதல் வேண்டும்.

**குறிப்பு**.- 1 எவரேனும் பரீட்சார்த்தியொருவரின் தந்தை அல்லது தாய் அரசாங்க சேவையின், மாகாண அரசாங்க சேவையின் அல்லது கூட்டுத்தாபனமொன்றின் இடமாற்றத்திற்குரிய சேவையொன்றில் ஈடுபட்டிருந்தால் அப்பரீட்சார்த்தி தனது, தந்தையின் அல்லது தாயின் பிறப்பிடத்தை தனக்குரிய மாவட்டமாக தெரிவு செய்து கொள்வதற்கு அனுமதிக்கப்படுவார். (பரீட்சார்த்தி அதற்காக தனது பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ்களின் பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும்.)

2. பரீட்சார்த்தி எவரும் ஒரு மாவட்டத்திற்கு மேற்படும் மாவட்டங்களின் வெற்றிடங்களுக்கு போட்டியிட அனுமதிப்படமாட்டார். தாம் மிகவும் விரும்புகின்ற மாவட்டம் யாதென்பதை ஒரு முறை குறிப்பிட்ட பின் அதனை மாற்ற முடியாது.

8. நிலவும் வெற்றிட எண்ணிக்கையில் 3% வீதம் வலது குறைந்த நபர்களுக்காக ஒதுக்கப்படும். பரீட்சையில் தகைமை பெறுகின்ற வலது குறைந்த நபர்களில் கூடிய, புள்ளி மட்டத்தை அடைகின்ற 03% வீதமானவர்கள் மட்டும் நியமனம் வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளின் புள்ளிகள் குறைந்த பட்சம் 50 வீதமாவது ஆதல் வேண்டும். நியமனமொன்றுக்காக தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் விசேட மருத்துவ பரிசோதனை குழுவிடம் சமர்ப்பிக்கப்படுவதுடன் தனது வலது குறைந்த நிலைமையும் சம்பந்தப்பட்ட பதவியில் கடமையாற்றுவதற்காக அது தடையாக இராது என்பதையும் விசேட மருத்துவ அறிக்கை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

9. பரீட்சைத்திட்டம்.- பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(1) மொழித்திறன் - 100 புள்ளிகள் 1 1/2 மணித்தியாலம்
(2) உளச்சார்பு - 100 புள்ளிகள் 1 மணித்தியாலம்

**மொழித்திறன்**.- இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் கருத்துரைகள், புரிந்துணர்வு, எழுத்தமைவுகள் மற்றும் இலக்கணத்தை எளிய முறையில் உபயோகிப்பதில் உள்ள அறிவை சோதனையிடும் வினாக்களைக் கொண்டிருக்கும்.

**உளச்சார்பு**.- இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் எண்களில் உள்ள ஆற்றல், தர்க்கரீதியான சக்தி, பொது விவேகம் என்பனவற்றை அளவிடும் வகையில் தயாரிக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும். (கடமைகளை நிறைவேற்றுவதற்காக பரீட்சார்த்திக்குள்ள தகைமைகளையும் ஆற்றல்களையும் சோதிக்கும் வகையில் இவ் வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படுகின்றன.)

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பினும் நியமனத்திற்கான தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் 40% ஆவது பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் 50% ஆவது பெற்றுக்கொள்ள வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிட எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யும் வண்ணம் பெறப்பட்ட புள்ளிகளின் ஒழுங்கு முறையைக் கண்டிப்பாக கடைப்பிடித்து நியமனங்கள் வழங்கப்படும்.

10. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை**.- விண்ணப்ப பத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் என தெரிய வருமாயின் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

11. **பரீட்சைக்கட்டணம்**.- பரீட்சைக்கட்டணம் ரூபா 250 ஆகும். இக்கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 4000-20-03-20-13 இன் கீழ் எந்தவொரு பிரதேச செயலகத்திற்கோ அல்லது மாவட்ட செயலகத்திற்கோ செலுத்தலாம். அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றினை எதிர்கால தேவைக்காக தன் வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாததுடன் காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12. **விண்ணப்பங்கள்**.-ஏ4 (21 × 29 cm) (சாதாரண ஹாப்ஷீட்) அளவிலான தாளை உபயோகித்து.

(அ) 01 முதல் 03 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும்.

(ஆ) 04 முதல் ஏனைய பந்திகள் மறுபக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப் படிவத்தைத் தயார் செய்து கொள்ளும்போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும்.

உரிய மாதிரி படிவ உருவில் அமையாதவையும் உரிய திகதிக்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும் முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புக்களும் இன்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத் தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்ப படிவத்தின் நிழற்படப்பிரதியை தம் வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப் படலாம்.

**குறிப்பு**.- பரீட்சைக்கு தோற்றுவதற்காக விண்ணப்பிக்கப்படும் நகரத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஏதேனும் ஒரு நகரத்திற்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாவிடின் இரண்டாவது விருப்பமாக

குறிப்பிட்டுள்ள நகரத்தின் பால் கவனம் செலுத்தப்படும். அந்த இரண்டாவது நகரத்தில் போதுமான பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை இல்லாதுவிடின் அண்மித்திருக்கும் நகரத்தின் பால் கவனம் செலுத்தப்படும்.

*12.1* வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை களைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பங்களை சமர்ப்பித் துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி உரிய பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகள் அனைவரும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர். போட்டிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமை பரீட்சார்த்தி இப்பதவிக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது. பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பின் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தேவையான தகைமைகளை அவர் கொண்டிருக்கவில்லையெனில் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படும்.

*12.2* விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "அரசாங்க முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2009" எனவும் நீங்கள் போட்டியிடும் மாவட்டத்தையும் குறிப்பிட வேண்டும்.

*12.3* விண்ணப்ப படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, படைதாங்கு சேவையின் ஆணைபெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலரொருவர், ரூபா 240,360 ஆண்டுச் சம்பளத்தை அல்லது அதற்குக் கூடிய அரசின் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவர் சான்றுப்படுத்த வேண்டும்.

*12.4* முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2009, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சை கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த,
பத்தரமுல்ல.

*13.* பரீட்சைக்கு தோற்றுதல்.- விண்ணப்பதாரர்களிடம் அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிவிப்பொன்றை இலங்கை பரீட்சை திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். உங்களிடத்திலுள்ள விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்திய நிழற்படப்பிரதிகள், பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு, கொழும்புக்கு வெளிப் பிரதேசமாயின் அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான பெக்ஸ் இலக்கம் குறிப்பிட்ட உங்கள் கோரிக்கை கடிதம் போன்றவற்றை உங்கள்வசம் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் மிகப் பயனுள்ளதாகும்.

*14.* பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லு படியான தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்).

*15.* பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்குதல் என்பது அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளுதல் என கருதுதல் ஆகாது. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

*16.* இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். பரீட்சார்த்திகள் யாவரும் இவ்வர்த்தமான பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்களின்படி நடந்து கொள்ள வேண்டுமென்ற கட்டுப்பாட்டுக்கு உட்படுவர்.

பீ. பி. பி. எஸ். அபேகுணரத்ன,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07,
2009, செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2009**

**Open Competitive Examination for Recruitment to Class III of Public Management Assistants Service - 2009**

(கொடுக்கப்பட்டுள்ள கூட்டினுள் சரியான குறியீட்டையும்/ இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்)

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

■ வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பதாரர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரம் மற்றும் இலக்கத்தை குறிப்பிடவும். (பரீட்சை நிலையங் கள் அமைக்கப்படும் நகரங்கள் மற்றும் நகர இலக்கங்களுக்காக அட்டவணை II ஐ பார்க்கவும்)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

■ வெற்றிடங்களுக்காக போட்டியிடுவதற்கு வர்த்தமானி அறிவித்தலில் 7.0 பந்திக்கேற்ப நீர் தெரிவு செய்யும் மாவட்டம் (மாவட்ட இலக்கங்களுடனான அட்டவணை I ஐ பார்க்கவும். உரிய மாவட்டம் மற்றும் மாவட்ட இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

| மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|
| | |

■ நீர் பரீட்சைக்கு தோற்றுவது வர்த்தமானி அறிவித்தலில் 8.0 பந்தியின் பிரகாரம் வலது குறைந்த புனர்வாழ்வு சலுகை நிபந்தனைகளின் கீழா?
இப் பகுதியை நிரப்புவதற்கு முன் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 8.0 ஐ நன்கு வாசிக்கவும்.

ஆம் - 1
இல்லை - 2 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

1. பெயர் :-
   1.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) (உதா.: PERERA, A.B.C.)
   1.2 முழுப்பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) : -----.
   1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.
   1.4 தேசிய ஆளடையாள அட்டை இல.:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. 2.1 நிரந்தர முகவரி :-----.
   (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)
   2.2 நிரந்தர முகவரி : -----.
   (சிங்களத்தில்/தமிழில்)
   2.3 பிரவேச அட்டை அனுப்பவேண்டிய முகவரி :-----.
   (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)

3. 3.1 பால் : (பெண் - 1/ஆண் - 0) ☐
   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)
   3.2 பிறந்த திகதி :
   ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐
   3.3 2009.11.16 ஆந் திகதிக்கு வயது :
   வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4. 4.1 நீங்கள் மாவட்டத்தில் என்று முதல் வசிக்கின்றீர்?
   4.2 உதவி அரசாங்க அதிபர் பகுதி/பிரதேச செயலாளர் பகுதி
   4.3 கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.

5. கல்வித் தகைமை :
   5.1 க. பொ. த. (சா/த) பரீட்சை பற்றிய விபரங்கள் :
   I. பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
   II. பரீட்சை சுட்டிலக்கம் :----.
   III. பெறுபேறுகள் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

   5.2 க. பொ. த. (உ/த) பரீட்சை பற்றிய விபரங்கள் :
   I. பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
   II. பரீட்சை சுட்டிலக்கம் :----.
   III. பெறுபேறுகள் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

   5.3 பரீட்சார்த்தி அங்கீகரிக்கப்பெற்ற பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்தை பெற்றிருப்பின் :-
   I. பல்கலைக்கழகத்தின் பெயர் :----.
   II. பட்டம் :----.
   III. பரீட்சை நடைபெற்ற ஆண்டு :----.

6. வேறு தகைமைகள் :----.

7. நீங்கள் எப்பொழுதாவது எத்தகையதுமான ஒரு குற்றச் சாட்டுக்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப் பட்டுள்ளீர்களா?

(உரிய கூட்டினுள் "✓" அடையாளமிடவும்.) ஆம் ☐ இல்லை ☐
(ஆம் எனில் விபரங்களை குறிப்பிடவும்)

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :----.
   I. பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
   II. பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
   III. செலுத்திய பணம் :----.

| பற்றுச்சீட்டு பிரித்தெடுக்க முடியாதவாறு இங்கு ஒட்டப்படுதல் வேண்டும். |
|---|

9. **விண்ணப்பதாரரின் சான்றிதழ் :**
   (அ) இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்து கின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப் படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரிய வந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங் களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்து கின்றேன்.

(ஈ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்ய மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................ என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் .................. ஆந் திகதியில் இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்.

திகதி :----.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

**அட்டவணை I**

***மாவட்டப் பெயர் அட்டவணையும் இலக்கமும்***

| *மாவட்டம்* | *இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| மாத்தளை | 04 |
| கண்டி | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| ஹம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| வவுனியா | 13 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| புத்தளம் | 17 |
| குருநாகல் | 18 |
| அநுராதபுரம் | 19 |
| பொலன்னறுவை | 20 |
| பதுளை | 21 |
| மொனராகலை | 22 |
| கேகாலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

**அட்டவணை I**

***பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் நகரங்கள்***

| *மாவட்டம்* | *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|---|
| 1. கொழும்பு | கொட்டாஞ்சேனை | 01 |
| | மருதானை | 02 |
| | பொறளை | 03 |
| | கறுவாத்தோட்டம் | 04 |
| | பம்பலபிட்டி | 05 |
| | ஹெவ்லொக் டவுண் | 06 |
| | நுகேகொடை | 07 |
| | மொறட்டுவை | 08 |
| | பிலியந்தலை | 09 |
| | ஹோமாகம | 10 |
| | மஹரகம | 11 |
| | ஹங்வெல்ல | 12 |
| | அவிசாவளை | 13 |
| 2. கம்பஹா | நீர்கொழும்பு | 14 |
| | மினுவங்கொடை | 15 |
| | திவுலப்பிட்டி | 16 |
| | வெயாங்கொடை | 17 |
| | கம்பஹா | 18 |
| | ஜா-எல | 19 |
| | வத்தளை | 20 |
| | களனி | 21 |
| | தொம்பே | 22 |
| 3. களுத்துறை | ஹொறணை | 23 |
| | பாணந்துறை | 24 |
| | களுத்துறை | 25 |
| | மதுகம | 26 |
| | அளுத்கம | 27 |
| 4. மாத்தளை | மாத்தளை | 28 |
| | கலேவெல | 29 |
| | நாஉல | 30 |
| | லக்கல-பல்லேகம | 31 |
| 5. கண்டி | கண்டி | 32 |
| | கட்டுகஸ்தோட்டை | 33 |

| மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| | தெல்தெனிய | 34 |
| | வத்தேகம | 35 |
| | நுகவெலை | 36 |
| | கலகெதர | 37 |
| | கம்பொளை | 38 |
| 6. நுவரெலியா | ஹெதுனுவெவ | 39 |
| | நுவரெலியா | 40 |
| | வதுமுல்ல | 41 |
| | ஹட்டன் | 42 |
| | கினிகத்ஹேன | 43 |
| 7. காலி | அம்பலாங்கொடை | 44 |
| | காலி | 45 |
| | பத்தேகம | 46 |
| 8. மாத்தறை | வெலிகம | 47 |
| | மாத்தறை | 48 |
| | கம்புறுபிட்டிய | 49 |
| | ஹக்மன | 50 |
| | தெய்யந்தர | 51 |
| | திக்வெல்லை | 52 |
| | அக்குரஸ்ஸ | 53 |
| | கொட்டபொல | 54 |
| 9. அம்பாந்தோட்டை | பெலிஅத்த | 55 |
| | வலஸ்முல்ல | 56 |
| | வீரகெட்டிய | 57 |
| | தங்காலை | 58 |
| | அம்பலாங்கொடை | 59 |
| | அம்பாந்தோட்டை | 60 |
| | திஸ்ஸமகாராமய | 61 |
| 10. யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | 62 |
| | யாழ்ப்பாணம் | 63 |
| | தெல்லிப்பளை | 64 |
| | பருத்தித்துறை | 65 |
| 11. மன்னார் | மன்னார் | 66 |
| | முருங்கன் | 67 |
| 12. முல்லைத்தீவு | முல்லைத்தீவு | 68 |
| 13. வவுனியா | வவுனியா | 69 |
| 14. திருகோணமலை | கந்தளாய் | 70 |
| | திருகோணமலை | 71 |
| | மூதூர் | 72 |
| | பதவி பராக்கிரமபுரம் | 73 |
| | கிண்ணியா | 74 |
| 15. மட்டக்களப்பு | மட்டக்களப்பு | 75 |
| | ஏறாவூர் | 76 |
| | காத்தான்குடி | 77 |
| 16. அம்பாறை | அம்பாறை | 78 |
| | சேரங்கட | 79 |
| | கல்முனை | 80 |
| | அக்கரைப்பற்று | 81 |
| | சம்மாந்துறை | 82 |
| 17. புத்தளம் | வென்னப்புவ | 83 |
| | மாதம்பை | 84 |
| | சிலாபம் | 85 |
| | புத்தளம் | 86 |
| 18. குருநாகல் | குளியாப்பிட்டி | 87 |
| | பிங்கிரிய | 88 |
| | நாரம்மல | 89 |
| | பொல்கஹவெல | 90 |
| | குருநாகல் | 91 |
| | இப்பாகமுவ | 92 |
| | தொடங்கஸ்லந்த | 93 |
| | மொறதிக | 94 |
| | நிக்கவெரட்டிய | 95 |
| | மாகோ | 96 |
| 19. அநுராதபுரம் | மதவாச்சி | 97 |
| | கெக்கிராவ | 98 |
| | அநுராதபுரம் | 99 |
| | கலென்பிந்துனுவெவ | 100 |
| | கஹட்டகஸ்திகிலிய | 101 |
| 20. பொலன்னறுவை | பொலன்னறுவை | 102 |
| | ஹிங்குரங்கொட | 103 |
| 21. பதுளை | பண்டாரவளை | 104 |
| | வெலிமடை | 105 |
| | பதுளை | 106 |
| | பசறை | 107 |
| | மஹியங்கனை | 108 |
| | கிராந்துறு கோட்டை | 109 |
| | ஹசலக | 110 |
| 22. மொணறாகலை | பிபில | 111 |
| | மொணறாகலை | 112 |
| | வெல்லவாய | 113 |
| 23. கேகாலை | கேகாலை | 114 |
| | றம்புக்கணை | 115 |
| | மாவனல்லை | 116 |
| | ருவன்வெல்ல | 117 |
| 24. இரத்தினபுரி | எஹெலியகொடை | 118 |
| | இரத்தினபுரி | 119 |
| | பெல்மடுல்ல | 120 |
| | பலாங்கொடை | 121 |
| | கலவானை | 122 |
| | எம்பிலிப்பிட்டி | 123 |
| 25. கிளிநொச்சி | கிளிநொச்சி | 124 |
| | பளை | 125 |

**உயர் கல்வி அமைச்சு**

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்

**கைத்தொழில் அபிவிருத்திக்கான வழிகாட்டி**

*உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் மாணவர்களை அனுமதித்தல் - 2010 கல்வி ஆண்டு*

2008 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் க. பொ. த. (உ. த.) பரீட்சையின் புதிய அல்லது பழைய பாடத்திட்டங்களை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளோருக்காக இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினால் (SLIATE) நடாத்தப்படுகின்ற உயர் தேசிய டிப்ளோமா மற்றும் தேசிய டிப்ளோமா பாடநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பிப்பது எப்படி?**

கீழே காணப்படுகின்ற மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை “அ” பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு உரிய உயர் தொழில்நுட்ப நிறுவன/பிரிவுக்கு (கொழும்பு) பார்க் வீதி, மக்கள் வங்கிக் கிளை அல்லது எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் 025-100133397613 SLIATE கணக்கு இலக்கத்துக்கு செலுத்தப்பட்ட ரூபா 250 க்கான ரசீதை இணைத்து பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “விண்ணப்பிக்கும் பாடநெறியை” குறிப்பிடல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு நிறுவனத்துக்கும் தனித்தனியான விண்ணப்பங்களை ஒவ்வொன்றுக்கும் தனியாக ரூபா 250 கட்டணத்தைச் செலுத்தி ரசீதுகளை இணைத்து அனுப்புதல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட கணக்கு இலக்கத்துக்கு மாறாக வேறு இலக்கங்களுக்கு கட்டணம் செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விரிவுரைகள் இடம்பெறும் முறைமை :**

காலை/முழுநேரக் கற்கைநெறி : கிழமை நாட்களில் பகல் நேரங்களில்

பகுதி நேர கற்கைநெறி : வார இறுதி நாட்களில் பகல் நேரங்களில்

(பகுதி நேர கற்கை நெறிகள் உரிய துறையில் தொழில் புரிவோருக்கு மட்டும் என மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.)

**கற்கை நெறிகளுக்கான கட்டணங்கள்.**- பகல் நேர பாடநெறிகளுக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது. அரை வருட காலத்துக்கான உயர் தேசிய டிப்ளோமா ஆங்கில பகுதி நேர மாணவர்களுக்கான பாடநெறிக் கட்டணம் இரண்டாயிரம் (ரூ. 2,000) 1 ஆம், 2 ஆம் வருட உயர் தேசிய டிப்ளோமா கணக்கியல் பகுதி நேர மாணவர்களுக்கான கட்டணம் இரண்டாயிரம் (ரூ. 2,000) அரையாண்டுக்கான 3 ஆம், 4 ஆம் வருட உயர் தேசிய டிப்ளோமா கணக்கியல் பகுதி நேர மாணவர்களுக்கான கட்டணம் ரூபா மூவாயிரம் (ரூ. 3,000) இது வருடாந்தம் மாற்றப்படக்கூடியது. (ஒரு வருடத்துக்கு இரண்டு தவணைகள்).

**நேர்முகப் பரீட்சை.**- தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டோர் எழுத்து மூலப் பரீட்சை அத்துடன்/அல்லது நேர்முகப் பரீட்சை ஒன்றுக்குத் தோற்றுதல் வேண்டும். க. பொ. த. (உ./த.) இல் பெற்றுக்கொள்ளப்பட்ட Z ஸ்கோர் அல்லது புள்ளிகளின் அடிப்படையிலேயே மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவர். இது தொடர்பான திகதி, நேரம், இடம், சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் போன்ற விபரங்கள் எழுத்துமூலம் அறிவிக்கப்படும். மூலப்பிரதி இல்லாத பட்சத்தில் மூலப் பிரதிகள் மாணவப் பதிவின்போது சமர்ப்பிக்கப்படும் என்ற அடிப்படையில் அதன் பிரதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும்.

**விடுதி வசதிகள்.**- ATI நைவல/ தெஹிவளையில் பெண் பிள்ளைகளுக்கு போன்றே அம்பாறை ஹார்டி ATI இல் ஆண் பிள்ளைகளுக்கும் வரையறுக்கப்பட்ட இடவசதிகளே உள்ளன. இந்த வசதிகள் முழுநேர மாணவர்களுக்கு மட்டுமேயாகும். நிறுவனத்துக்கும் மாணவர்களின் வீட்டுக்கும் இடையில் உள்ள தூரத்தின் அடிப்படையிலேயே இது நிர்ணயிக்கப்படும்.

பிரிவு “அ”

**உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள்/ATI பிரிவுகளின் விலாசங்கள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் குறியீட்டு இலக்கங்கள்**

| குறியீட்டு இல. | ATI/ ATI பிரிவின் பெயர் | விலாசங்கள் | தொலைபேசி இல. |
|---|---|---|---|
| 01 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், தெஹிவளை | வைத்தியா வீதி, தெஹிவளை | 011-2714270, 011-2738349 |
| 02 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், காலி | களுவெல்ல, காலி | 091-2244550, 091-2223774 |
| 03 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், கண்டி | இல. 16, கெப்பட்டிபொல வீதி, கண்டி | 081-2226644, 081-2232097 |
| 04 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், குருநாகல் | இல. 22/1, வில்கொட வீதி, குருநாகல் | 037-2224911, 037-2229583 |
| 05 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், பதுளை | கிறீன்லண்ட் டிரைவ், பதுளை | 055-2230218, 055-2223818 |
| 06 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம் | இல. 665/5, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் | 021-2222595 |
| 07 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், நைவல | நைவல, எஸ்ஸல்ல, வேயன்கொடை | 033-2287519, 033-2292544 |

| குறியீட்டு இல. | ATI/ ATI பிரிவின் பெயர் | விலாசங்கள் | தொலைபேசி இல. |
|---|---|---|---|
| 08 | ஹாடி உயர் தொழில்நுட்ப நிறுவனம், அம்பாறை | இங்கினியாகலை வீதி, அம்பாறை | 063-2222056, 063-2222056 |
| 09 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், திருகோணமலை | கிண்ணியா வீதி, வரோதய நகர், திருகோணமலை | 026-2223232, 026-2222593 |
| 10 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், லபுதுவ | சிரிதம்ம மாவத்தை, லபுதுவை, அக்மீமன | 091-2227180, 091-2246179 |
| 11 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், கேகாலை | பண்டாரநாயக்க மாவத்தை, கேகாலை | 035-2221297 |
| 12 | உயர் தொழில்நுட்ப நிறுவனப் பிரிவு, அநுராதபுரம் | தொழில்நுட்பக் கல்லூரி, புதிய நகரம், அநுராதபுரம் | 025-2234417 |
| *13 | உயர் தொழில்நுட்ப நிறுவனப் பிரிவு, இரத்தினபுரி | இல. 14, புதிய நவீன சந்தை, இரத்தினபுரி | 045-2230780 |
| 14 | உயர் தொழில்நுட்ப நிறுவனப் பிரிவு, சம்மாந்துறை | பிரதான வீதி, சம்மாந்துறை | 067-2261304, 067-2261304 |
| 15 | உயர் தொழில்நுட்ப நிறுவனப் பிரிவு, மட்டக்களப்பு | தொழில்நுட்பக் கல்லூரி, மஞ்சந்துடுவை, மட்டக்களப்பு | 065-2247519, 065-2247519 |
| *16 | உயர் தொழில்நுட்ப நிறுவனப் பிரிவு, தங்காலை | கடல் பிரயாண மற்றும் கடற்றொழில் பொறியியல் கல்லூரி, மகாவலி வீதி, தங்காலை | 047-2242327, 091-2244550 |

* இரத்தினபுரி மற்றும் தங்காலை ATI பிரிவுகளின் விலாசங்கள் 2010, சனவரி அன்று மாற்றப்படும்.

***நிறுவனங்களின் பாடநெறிகளின் பெயர் மற்றும் குறியீட்டு இலக்கங்கள்***

| பாடநெறியின் பெயர் | காலம் | பாடநெறிகள் நடாத்தப்படுகின்ற நிறுவனங்களின் குறியீட்டு இலக்கம் |
|---|---|---|
| 1. உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (உ. தே. க. டி.) பகல்/முழுநேரம் | 4 வருடம் | 1, 2, 3, 4, 5, 6, 7, 9, 11, 12, 14, 15 |
| 1 உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (உ. தே. க. டி.) பகுதி நேரம் | 4 வருடம் | 1, 2, 3, 4, 5, 6, 7, 9, 11, 12, 13, 14, 15, 16 |
| 2. உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (உ. தே. மு. டி.) பகல்/முழுநேரம் (ஆங்கில மொழி மூலம்) | 3 வருடம் | 1, 2, 3, 4, 5, 6 |
| 3. உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா (உ.தே.த.தொ.டி.) பகல்/முழுநேரம் (ஆங்கில மொழி மூலம்) | 2 1/2 வருடம் | 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11 |
| 4. உயர் தேசிய தொழில்நுட்ப விவசாய டிப்ளோமா (உ. தே. தொ. வி. டி.) (விவசாயம்) பகல்/முழுநேரம் (ஆங்கில மொழி மூலம்) | 3 வருடம் | 7, 8, 10 |
| 5. உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (உ. தே. டி. ஆங்கிலம்) பகல்/முழுநேரம் | 2 வருடம் | 1, 2, 3, 4, 5, 6, 8, 11 |
| 5.1 உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (உ. தே. டி.ஆங்கிலம்) பகல்/முழு நேரம் | 2 வருடம் | 1, 2, 3, 4, 5, 6, 8, 9, 11, 12, 14, 15 |
| 6. உயர் தேசிய வியாபாரக் கல்வி டிப்ளோமா (உ. தே. வி. க. டி.) பகல்/முழுநேரம் (ஆங்கில மொழி மூலம்) | 3 வருடம் | 1, 2, 3, 5, 6 |
| 7. தேசிய வியாபார நிதி டிப்ளோமா (தே. வி. நி. டி.) | 2 வருடம் | 1 |

**குறிப்பு** :

1. சகல பாடநெறிகளின் பாடத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன. சில பாடநெறிகளின் பாடத்திட்டங்கள் திருத்தப்பட்ட பாடத்திட்டத்திற்கு அமைய 2010 இல் ஆரம்பிக்கப்படும். அத்துடன் அந்தப்பாடநெறிகளின் காலமும் மாற்றப்படலாம்.

2. முதலாம் மற்றும் இரண்டாவது வருடங்களுக்கு உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பாடத்திட்டத்தின் (பகல்/முழுநேரம்) போதனா மொழி மூலம் சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலமாகும். அத்துடன் வார நாட்களில் மாத்திரம் நடாத்தப்படும். மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டுகளின் பாடநெறி வார இறுதி நாட்களில் மாத்திரம் நடாத்தப்படும். அத்துடன் அதன் போதனா மொழி ஆங்கிலம் ஆகும்.

3. உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (பகல்/முழுநேரம்) முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டுகள் பாடநெறி வார நாட்களில் பகல் மாத்திரம் நடாத்தப்படும். அத்துடன் மூன்றாம் ஆண்டு வார இறுதி நாட்களில் நடாத்தப்படும்.

4. க. பொ. த. (உ/த) பரீட்சை புதிய பாடத்திட்டத்தில் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் பொதுப் பரீட்சை தாளில் ஒரு சித்தி பெற்றிருத்தல் அவசியம்.

5. க. பொ. த. (உ/த) பரீட்சையில் பெற்ற Z Score அல்லது சராசரி புள்ளிகளின் அடிப்படையிலேயே தேர்வுகள் மேற்கொள்ளப்படும்.

6. தகைமை பரீட்சையில் பாடத்தில் அல்லது பாடநெறிக்கு சம்பந்தமான துறையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

7. பகல் நேர பாடநெறிகளுக்காக 22 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
எந்தவொரு இலங்கை பல்கலைக்கழக/இணைந்த பல்கலைக்கழக கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, கல்விக் கல்லூரி/ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அல்லது ஏனைய மற்றும் உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஓர் உள்ளக மாணவராக பாடநெறியொன்றைப் பின்பற்றுபவர்கள், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் பகல்/முழுநேர மாணவனாகப் பதிவு செய்து கொள்ள முடியாது. சொல்லப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்துள்ள ஏதேனும் நிறுவனங்களில் முழு நேர பாடநெறிகளை ஏதும் மாணவரொருவர் மேற்கொள்வது தெரியவரின் அவர்களின் பதிவுகள் இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் இரத்துச் செய்யப்படும்.

8. குறிப்பிட்ட ATI அல்லது ATI பிரிவிற்கு முழுநேர பாடநெறிக்காக தெரிவுசெய்யப்பட்ட பின்பு எக்காரணம் கொண்டும் வேறு உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கும் எந்தவொரு மாணவரும் மாற்றப்படமாட்டார்.

## பகுதி "ஆ"

மேற்கூறப்பட்ட கற்கைநெறிகளுக்கான தகைமைகள் கீழே தரப்பட்டுள்ளன :-

1. **உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா - உ. தே. க. டி. (பகல்/முழுநேரம்).- விண்ணப்பதாரி கீழ்வரும் தகைமைகளில் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :**

(i) க. பொ. த. (உ/த) பரீட்சை (பழைய பாடத்திட்டம்) நான்கு பாடங்களில் சித்திபெற்றிருத்தல். அந்தப் பாடங்களில் ஒன்றாக தூயகணிதம் அல்லது கணக்கியலுடன் ஒரே அமர்வில் ஆகக்குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
கணிதம் அல்லது கணக்கியலில் ஒரு திறமைச்சித்தி இல்லாவிடத்து க. பொ. த. (சா/த) இல் இந்தப் பாடங்களில் ஒன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் பிரதான பதிலீடாகக் கவனத்திற் கொள்ளப்படும்.
க. பொ. த. (சா/த.) இல் கணிதத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல். க. பொ. த. (உ. த.) இல் தூயகணிதம் அல்லது கணக்கியலில் ஏதாவது ஒன்றில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் ஒரு பதிலீடாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) ஒரே முறையில் மூன்று பாடங்களில், இணைந்த கணிதம் அல்லது கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும். இம்மூன்று பாடங்களில் ஆகக் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ. த.) இல் இணைந்த கணிதம் அல்லது கணக்கியல் பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருக்காவிடில் க. பொ. த. (சா. த.) இல் கணித பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(iii) தொழிற்நுட்பக் கல்வி பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கியல் தொழில் நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

(iv) க. பொ. த. (சா/த) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ/த) பழைய பாடத்திட்டத்தில் நான்கு பாடங்களில் அல்லது புதிய பாடத்திட்டத்தில் மூன்று பாடங்களில் பெற்ற ஆகக்கூடிய புள்ளிகளின் அடிப்படையிலேயே தெரிவுகள் இடம்பெறும்.

1.1 **உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா - உ. தே. க. டி. (பகுதி நேரம்).-** விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து பெற்ற பட்டம் அல்லது இடைநிலைப் பரீட்சை
(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே தடவையில் நான்கு பாடங்களில் (பழைய பாடத்திட்டத்தில்) மூன்று பாடங்கள் (புதிய பாடத்திட்டத்தில்) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(iii) தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற கணக்கியல் தொழில்நுட்பவியலாளர் தேசிய சான்றிதழை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iv) தொழில்நுட்பக் கல்வி பயிற்சியளித்தல் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற வியாபாரக் கற்கையில் (கணக்கியல் குரூப்) தேசிய சான்றிதழைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியளித்தல் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட தேசிய கணக்கியல் சான்றிதழை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

**குறிப்பு :**

(அ) ***தொழில் அனுபவம்.***- விண்ணப்பதாரிகள் பொருத்தமான அரச நிறுவனம் ஒன்றில்/ பொது நிறுவகத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கடமையாற்றியிருத்தல் வேண்டும்.

(ஆ) பின்வரும் தகுதிகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் முதலாம் வருடத்திலிருந்து விலக்களிக்கப்பட்டு இக்கற்கை நெறியின் இரண்டாம் வருடத்திற்கு, ஏனைய அனுமதித் தகைமைகளைப் பூர்த்திசெய்து, இடமிருப்பின் அனுமதிக்கப்படுவர் :-

(1) வியாபார கற்கை/நிதி தொடர்பான தேசிய டிப்ளோமா
(2) உயர் தேசிய வர்த்தக/முகாமைத்துவ டிப்ளோமா, இரண்டாம் ஆண்டு
(3) விஞ்ஞானமாணி (வியாபார நிர்வாகம்)
(4) வணிகமாணி
(5) விஞ்ஞானமாணி (கணக்கியல்)
(6) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (ICASL) 1 ஆம், 2 ஆம் பகுதி
(7) பட்டயக் கணக்காளர், கணக்கியல் நிறுவனத்தின் (CIMA) 1 ஆம், 2 ஆம் பகுதி
(8) இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்ப நிறுவனத்தின் (AAT) 3 ஆம் கட்டப் பகுதி.

*2.* ***தேசிய உயர் முகாமைத்துவ டிப்ளோமா - தே. மு. டி. (பகல்/முழுநேரம்).***- விண்ணப்பதாரிகள் கீழ்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) நான்கு பாடங்களிலும்/க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) இல் ஒரே முறையில் மூன்று பாடங்களிலும், க. பொ. த. (சா. த.) இல் ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ii) தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ் அல்லது வியாபார கற்றை நெறிக்கான தேசிய சான்றிதழ் (பொது நிர்வாகம்/சந்தைப்படுத்தல்) அத்துடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம், கணிதத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

*3.* ***உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா - (உ. தே. த. தொ. டி.) (பகல்/முழுநேரம்).***- விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) (பழைய பாடத்திட்டம்) இல் ஒரே முறையில் பௌதீகவியல்/*விவசாய விஞ்ஞானம், தூயகணிதம், கணக்கியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக நான்கு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) (பழைய பாடத்திட்டம்) இல் ஒரே முறையில் பௌதீகவியல்/*விவசாய விஞ்ஞானம், விலங்கியல், தாவரவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக நான்கு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

(iii) க. பொ. த. (உ. த.) (புதிய பாடத்திட்டம்) இல் ஒரே முறையில் பௌதீகவியல்/*விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம், கணக்கியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

(iv) க. பொ. த. (உ. த.) (புதிய பாடத்திட்டம்) இல் ஒரே முறையில் பௌதீகவியல்/*விவசாய விஞ்ஞானம், உயிரியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன்

(v) க. பொ. த. (சா. த.) இல் ஆங்கிலத்திலும் கணிதத்திலும் சாதாரண சித்தி.

* 1995 புதிய பாடத்திட்டத்தின்கீழ் செயற்படுத்தப்படும் க. பொ. த. (உ. த.) விவசாய விஞ்ஞானம்.

*4.* **உயர் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (உ. தே. தொ. டி.) (விவசாயம்) (பகல்/முழுநேரம்).**- விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க. பொ. த. (உ. த.) (பழைய பாடத்திட்டம்) உயிரியல் விஞ்ஞானத்தில் ஒரே முறையில் நான்கு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அவற்றில் இரண்டு இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், தாவரவியல், விலங்கியல், பௌதீகவியல் ஆகிய பாடங்களாக அமைதல் வேண்டும்.

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) உயிரியல் விஞ்ஞானத்தில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அவற்றில் இரண்டு இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், தாவரவியல், பௌதீகவியல் ஆகிய பாடங்களாக அமைதல் வேண்டும்.

அத்துடன்

(iii) க. பொ. த. (சா. த.) இல் ஆங்கிலத்திலும் கணிதத்திலும் சாதாரண சித்தி.

*5.* **தேசிய உயர் ஆங்கில டிப்ளோமா** (HND in-English) **(பகல்/பகுதி நேரம்).**- விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) இல் ஆங்கிலம் உட்பட மூன்று பாடங்களில் சித்தி.

(ii) க. பொ. த. (உ. த.) இல் மூன்று பாடங்களில் சித்தியுடன் க. பொ. த. (சா. த.) இல் ஆங்கில இலக்கியத்தில் சித்தியும் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி.

(iii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல், க. பொ. த. (சா. த.) இல் ஆங்கில மொழியில் விசேட சித்தியடைந்திருத்தல் (A அல்லது B).

(iv) ஆங்கில சிறப்பு ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது ஆங்கில ஆசிரியர்களுக்கான கல்விக் கல்லூரி டிப்ளோமா.

(v) க. பொ. த. (உ. த.) இல் மூன்று பாடங்களில் சித்தியுடன் தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வர்த்தகக் கைத்தொழிலும் மேலதிகக் கல்வியும் தொடர்பான ஆங்கில தேசிய சான்றிதழ் பரீட்சையில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

*6.* **தேசிய உயர் வர்த்தக கல்வி டிப்ளோமா (பகல்/முழுநேரம்).**- விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) (பழைய பாடத்திட்டம்) பரீட்சையில் பொருளியல், வர்த்தகமும் நிதியியலும், கணக்கியல் ஆகிய பாடங்களில் சித்தி அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பாடங்களில் இரண்டு பாடங்களிலும் அதே பரீட்சையில் அரசியல் விஞ்ஞானம், தூயகணிதம், புவியியல், சிங்களம், தமிழ், ஆங்கிலம், தர்க்க சாஸ்திரம், சரித்திரம், வியாபாரக் கணிப்பீடு ஆகிய பாடங்களில் ஒன்றிலும் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) (புதிய பாடத்திட்டம்) இல் பொருளியல், வர்த்தகக் கற்கைகள், கணக்கியல் ஆகிய மூன்று பாடங்களில் சித்தி அல்லது க. பொ. த. (உ. த.) இல் மேலுள்ள மூன்று பாடங்களில் இரண்டு பாடங்களிலும் புவியியல், மனையியல், அரசியல் விஞ்ஞானம், தர்க்க சாஸ்திரமும் விஞ்ஞானமும், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம், வியாபார கணிப்பீடு ஆகிய பாடங்களில் ஒன்றிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கியல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ்

அத்துடன்

(iv) க. பொ. த. (சா. த.) இல் கணிதத்திலும் ஆங்கிலத்திலும் சாதாரண சித்தி.

*7.* **வர்த்தகமும் நிதியிலுமான தேசிய டிப்ளோமா – வ. நி. தே. டி. (பகல்/முழுநேரம்).**- விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) (பழைய பாடத்திட்டம்) பரீட்சையில் பொருளியல், வர்த்தகம் மற்றும் நிதி, கணக்கியல் உட்பட நான்கு பாடங்களில் ஒரே முறையில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

(ii) க. பொ. த. (உ. த.) (புதிய பாடத்திட்டம்) இல் பொருளியல், வர்த்தகக் கற்கைகள், கணக்கியல் ஆகிய மூன்று பாடங்களில் சித்தி அல்லது மேலே குறிப்பிட்டுள்ள பாடங்களில் இரண்டு பாடங்களிலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் ஒரு பாடத்திலும் ஒரே முறையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். புவியியல், மனைப் பொருளியல், அரசியல் விஞ்ஞானம், தர்க்கசாஸ்திரமும் விஞ்ஞானமும், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம்.

அல்லது

(iii) தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கியல் தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ்.

அத்துடன்

(iv) க. பொ. த. (சா. த.) ஆங்கிலத்திலும் கணிதத்திலும் சாதாரண சித்தி.

**குறிப்பு :**

(1) யாழ்ப்பாணம், திருகோணமலை, சம்மாந்துறை மற்றும் மட்டக்களப்பு, தெஹிவளை ஆகிய உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் நடாத்தப்படும் பாடநெறிகள் தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும். அத்துடன் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா சிங்கள மொழி

மூலம் (பகல்) பாடநெறிகள் திருகோணமலையிலுள்ள உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் நடத்தப்படும்.

(2) ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட (சாதாரண சித்தி) வர்த்தக பட்டப்படிப்புக்கு சமனான 2008, ஒற்றோபர் 46/90 (iii) சுற்றுநிருபத்தால் செல்லுபடியாக்கப்பட்ட கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ்.

(3) தெஹிவளை உயர் தொழில்நுட்ப நிறுவனங்களால் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பகுதி நேர பாடநெறிகள் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகள் மூலம் நடத்தப்படும். கண்டி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பகுதிநேர பாடநெறிகள் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் நடத்தப்படும்.

(4) உங்கள் தகுதி அடிப்படையில் உங்களால் குறிப்பிடப்படும் கல்வித் திட்டங்களுக்கான தெரிவுகள் பிரவேசங்களுக்காக ஆலோசிக்கப்படும்.

2010 கல்வியாண்டு உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள்/பிரிவுகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் சம்பந்தமாக SLIATE இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தீர்ப்பே இறுதியானதென்பதை தயவுசெய்து கவனிக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 06.11.2009.

எச். டி. கமல் பத்மசிறி,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்,
இல. 18/2, வோட் பிளேஸ்,
கொழும்பு 7.
Web Site : www.sliate.net

*Office use only* | Course Number ..........................................

*SPECIMEN APPLICATION FORM*

**SRI LANKA INSTITUTE OF ADVANCED TECHNOLOGICAL EDUCATION**

***Application Form for Admission to Higher National Diploma/National Diploma Course***

Name of the Institute/Institute Section :........................................................

| *Name of the Course* | *Order of Preference* | *Medium* |
|---|---|---|
| 1 ............................ | .......................................... | ............................... |
| 2 ............................ | .......................................... | ............................... |
| 3 ............................ | .......................................... | ............................... |

1. Name with initials :..............................................................................................................

2. Name/Names denoted by Initials :......................................................................................
.......................................................................................................................................

3. Address :.............................................................................................................................
.......................................................................................................................................

4. Date of Birth :
   Year .......................... Month .......................... Date ..........................
   Age (as at 01.01.2010) : Years ..................... Months ..................... Days ...............

5. National Identity Card No. :.................................................................................................

6. Sex : Male/Female :..............................................................................................................

7. Administrative District :.......................................................................................................

8. (i) Results of GCE (A/L) Examination (In or Before 2008)

Year : ............................ Index No. :............................ Medium :............................

| *Pass Subject* | *Grade* |
|---|---|
| 1. ...................................... | ...................................... |
| 2. ...................................... | ...................................... |
| 3. ...................................... | ...................................... |
| 4. ...................................... | ...................................... |

If under New Syllabus, indicate pass or fail in the General Paper :......................................

Aggregate/Average Marks or Z-Score of the above examination, issued by the Department of Examinations :...............................

(ii) Results of GCE (O/L) Examination

Year : ............................ Index No. :............................ Medium :............................

| *Subject* | *Grade* | *Subject* | *Grade* |
|---|---|---|---|
| 1. ........................... | ........................... | 6. ........................... | ........................... |
| 2. ........................... | ........................... | 7. ........................... | ........................... |
| 3. ........................... | ........................... | 8. ........................... | ........................... |
| 4. ........................... | ........................... | 9. ........................... | ........................... |
| 5. ........................... | ........................... | 10. ........................... | ........................... |

9. Highest Qualification in English as a subject : ......................................

10. Details of Occupation :- Date of Appointment :................................
(only for part-time/week-end courses)
Post :......................................
E. P. F. Number :......................................
Place of Work and Address :......................................

I hereby declare that I am not following any other full-time course of study in any other state institution. I am aware that my registration will be cancelled at any time during the period of study if it is found that I concurrently follow a full-time course at any other state institution. I hereby certify that the information furnished here is true and accurate to the best of my knowledge.

......................................,
Signature of Applicant.

Date :-----.

(The Bank receipt for Rs. 250 payable to SLIATE should be annexed)

10-557

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

*நில அளவைத் திணைக்களம்*

**இலங்கை தொழில்துட்பவியலாளர்கள் சேவையில் ஒளிப்பட அளவை தொழில்துட்பவியலாளர்கள் பதவிமில் பயிற்சித் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான பகிரங்கப் போட்டிப் பரீட்சை**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒளிப்பட அளவை தொழில்நுட்பவியலாளர்கள் பதவியில் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்பு தொடர்பான கல்வித் தகைமைகளில் பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

(அ) க.பொ.த.(சா.த) பரீட்சையில் இரண்டு அமர்விற்கு மேற்படாத வகைமில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் வேறு ஏதேனும் ஒரு பாடம் உள்ளடங்கலாக திறமைச் சித்திகளுடன் மொத்தம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன் க.பொ.த (உ.த) பரீட்சையில் இந்தத் துறையுடன் சம்பந்தப்பட்ட தூயகணிதம், பிரயோக கணிதம், இணைந்த கணிதம், பௌதீகம் மற்றும் இரசாயனம் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்கள் அடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

(ஆ) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட அடிப்படை கல்வித் தகைமைகளுடன், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் துட்பக்கல்லூரி ஒன்றினால் வழங்கப்படும் இத்துறையுடன் தொடர்புடைய தொழில்துட்பவியல் தேசிய சான்றிதழ் (மூன்று வருடகால பகுதிநேரப் பயிற்சி நெறி) அல்லது படவரைவியலில் ஒருவருட கால முழுநேரப் பயிற்சிப் பாடநெறியில் சான்றிகழ் ஒன்றைக் கொணிடிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- பகிரங்கப் போட்டிப் பரீட்சையில் தொழில்நுட்பச் சேவையின் பயிற்சித் தரத்திற்கு தகைமைபெற்றவர்களில், அதாவது,

(i) மேலே பந்தி ''அ'' இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளுடன் உள்ள பரீடசார்த்திகள் குறிப்பிட்ட சேவைக்கென நிர்ணயிக்கப்பட்ட பாடத்திட்டத்தின் படி பெறவேண்டிய இரண்டு வருடகால கோட்பாட்டுரீதியான மற்றும் செய்முறைப்பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து சித்தியடைந்த பின்னர் தரம் III சம்பள அளவுத்திட்டத்தின் அடிப்படையில் ஆரம்பப் படிநிலையில் பதவிக்கு அமர்த்தப் படுவார்.

(ii) மேலே பநிதி ''ஆ'' இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளுடன் உள்ள பரீட்சார்த்திகள் குறிப்பிட்ட சேவைக்கென நிர்ணயிக்கப்பட்ட பாடத்திட்டத்தின் படி பெறவேண்டிய ஒரு வருடகால கோட்பாட்டு ரீதியான மற்றும் செய்முறைப் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து சித்தியடைந்த பின்னர் தரம் III சம்பள அளவுத்திட்டத்தின் அடிப்படைமில் ஆரம்பப் படிநிலையில் பதவிக்கு அமர்த்தப்படுவர்.

இதற்கு அமைவாக மேற் கூறப்பட்ட பதவிக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் திகதி 2009.11.03 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட தகைமைகளைக் கொண்டிருக்காத ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

எஸ்.எம்.டபிள்யூ. பெர்னாந்து,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணைக்களம்,
கொழும்பு - 05,
02.10.2009.

10-630

---

**இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2009**

இவ்வறிவித்தலில் 'செயலாளர்' என்னும் பதம் அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும் "சேவை" என்ற பதம் இலங்கை நிருவாக சேவை எனப்பொருள்படும்.

1. **எழுத்துமூலப் பரீட்சை**.- இப்பரீட்சை பின்வரும் வினாப்பத்திரங்களைக் கொண்டமைந்திருக்கும் :-

(i) பொது விவேகம்
(ii) கட்டுரையும் சுருக்கமும்
(iii) பொது அறிவு
(iv) முகாமைத்துவ உளச்சார்பு

***பரீட்சைத் திகதி***.-இப் பரீட்சை 2010 சனவரி மாதம் 'கொழும்பிலும் (நகர இல. 01) யாழ்ப்பாணத்திலும் (நகர இல. : 02) நடாத்தப்படும். இப்பரீட்சைக்கு விண்ணப்பம் செய்த நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. இப்பரீட்சையை ஒத்திவைக்கவோ அல்லது இரத்துச் செய்வதற்கோ அரசாங்க சேவை ஆணைக்குழுவின்/ அமைச்சரவையின் ஆலோசனைகளுக்கமைய செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

***வாய்மொழிப் பரீட்சை***.- எழுத்துப் பரீட்சையில் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கிடையில் போதுமானதென அரசாங்க சேவை ஆணைக்குழுவினால்/ அமைச்சரவையால் விதிக்கப்படும் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரிகள் தொடர்பில் அமைவு முறையில் வாய்மொழிப் பரீட்சை நடாத்தப்படும் திகதியை செயலாளர் தீர்மானிப்பார்.

2. நியமனம் செய்யப்படுவோரின் எண்ணிக்கையும், நியமனம் நடைமுறைப்படும் திகதியும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின்/ அமைச்சரவையின் கட்டளைப்படி தீர்மானிக்கப்படும்.

3. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவை நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட) 2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதிய சேவை பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்புக்கு மேற்கொள்ளப் பட்டுள்ளதும், வருங்காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும் அமைய தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் சேவையின் வகுப்பு III இற்கு நியமனம் செய்யப்படுவார்.

3.1 தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும்/ அல்லது நியமனம் செய்யப்படும் ஒரு பதவியில் அல்லது நியமனம் செய்யப்பட்ட ஒரு பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்க மறுக்கின்ற அல்லது நழுவுகின்ற பரீட்சார்த்திகளின் நியமனங்கள் இரத்துச் செய்ய இடமுண்டு.

4. **அமைவும் மாதாந்த சம்பள அளவுத்திட்டமும்** :

| | |
|---|---|
| விசேட தரம் | : ரூபா 42,390 - 12 × 1,310 - ரூபா 58,110 |
| வகுப்பு I | : ரூபா 36,755 - 17 × 1,050 - ரூபா 53,555 |
| வகுப்பு II | : ரூபா 30,175 - 8 × 790 - ரூபா 35,705 |
| வகுப்பு III | : ரூபா 22,935 - 10 × 645 - ரூபா 29,385 |

(நியமனத் திகதியிலிருந்து 03 வருட காலப்பகுதிக்குள் I ஆவது வினைத்திறன்காண் தடையும் நியமனத் திகதியிலிருந்து 06 வருடகாலப்பகுதிக்குள் 2ஆவது வினைத்திறன் காண் தடையும் சித்தியடைய வேண்டுமென்பதுடன் நியமனம் கிடைக்கப்பெற்று 05 ஆண்டுகள் முடிவுறுவதற்கு முன்னர் 2007.05.28 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இன் பிரகாரம் இரண்டாவது அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.)

இப்பரீட்சை மூலம் இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புகள் செய்யப்படுகின்றது.

5. **உடல் நிலைமையும் ஒழுக்கமும்**.- பரீட்சார்த்தி நல்ல உடல் நிலையுடையவர் என்றும், நல்லொழுக்கமுடையவரென்றும் செயலாளர் திருப்தியடைதல் வேண்டும். அவர் நல்ல கண்பார்வை உடையவராகவும் இருக்க வேண்டுமென்பதுடன் இத்தீவில் எப்பகுதியிலேனும் சேவையாற்றத்தக்க உடல்நிலை உடையவராகவும் இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் மருத்துவப் பரிசோதனை ஒன்றுக்குத் தோற்ற வேண்டும்.

6. **தகைமைகள்**.- இதற்காக தோற்றுகின்ற பரீட்சார்த்தியொருவர் பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்படும் பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

(அ) பல்கலைக்கழக பட்டம் வலுப்பெறும் திகதி 2009.11.16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதியாக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் 2009.11.16 ஆந் திகதியில் 28 வயதை அடையாதவராக இருத்தல் வேண்டும்.

(iv) நல்லொழுக்கத்துடனும் சிறந்த தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

(v) ஏதேனுமொரு சமயக் கிளையில் மதகுரு அந்தஸ்தில் உள்ள எந்தவொரு நபருக்கும் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

**குறிப்பு** :-

(i) இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் இப்போட்டிப் பரீட்சையில் இரண்டு முறைகளுக்கு மேலாக தோற்றுவதற்கு எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது.

(ii) இப்பரீட்சைக்காக விண்ணப்பம் செய்வதற்கு தேவைப்படும் தகைமைகள் 2009.11.16 ஆந் திகதியில் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 300 ரூபா ஆகும். அதனை விண்ணபப்ங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இறுதித் திகதிக்கு முன்னர் எந்தவொரு மாவட்ட செயலகத்திற்கோ அல்லது பிரதேச செயலகத்திற்கோ வருமானத் தலைப்பு 2003-20-13 க்கு வரவு வைப்பதற்காக செலுத்த வேண்டும். மாவட்டச் செயலகத்திலிருந்து/ பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை தம் வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

8. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ உருவில் அமைய வேண்டும் என்பதுடன் அதை 8 1/2 "x 12" (A4) அளவுடைய ஒரு தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு தயாரித்த விண்ணப்பத்தை பரீட்சார்த்தியின் கையெழுத்திலேயே பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். 1.0 தொடக்கம் 3.11 வரையிலான கூடுகளை விண்ணப்பத்தில் முதலாம் பக்கத்திலும் 4.0 தொடக்க 8.0 வரையான கூடுகள் அதன் மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதை விசேடமாக கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமையாத விண்ணப்பங்களும் முழுமை பெறாதவாறு தகவல்களை குறிப்பிட்டுள்ள விண்ணப்பங்களும் அறிவிப்பு ஏதுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தில் நிழற்படப் பிரதியொன்றை தம் வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுள்ளதாகும்.) பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப் படலாம்.

(ஆ) பரீட்சார்த்தி எம்மொழியில் பரீட்சைக்கு தோற்ற விரும்புகிறாரோ அம் மொழியில் விண்ணப்பம் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் “பரீட்சை

ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சை திணைக்களம், (ஒழுங் கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சை கிளை) பெலவத்தை, பத்தரமுல்ல" என்று முகவரியிடப்பட்டு 2009.11.16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2009" என்று தெளிவாக எழுதப்படல் வேண்டும். அத்திகதிக்கு பின் கிடைக்கும் விண்ணப்பம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் மொழி விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படல் அத்தியாவசியமாகும்.

(ஈ) விண்ணப்பப்பத்திரத்தில் உள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படைதாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 240,360 இற்கு மேற்பட்ட ஆண்டுச் சம்பளத்தையுடைய அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுபடுத்தப்படல் வேண்டும்.

(உ) எல்லா வகையிலும் நிறைவு பெற்றிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பம் அஞ்சலில் தொலைந்துவிட்டமை அல்லது தாமதித்தமை பற்றிய முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(ஊ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது. இலங்கை பரீட்சை திணைக்களம் விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பி உடன், அது தொடர்பாக பத்திரிகைகளில் அறிவிப்பொன்றை வெளியிடும். அறிவிப்பு வெளியாகி 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் முடிவடைந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்திய நிழற்பட பிரதிகளும் பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டும் கொழும்புக்கு வெளியிடமாயின் அனுமதி அட்டை அனுப்பி வைக்க வேண்டிய பெக்ஸ் இலக்கம் குறிப்பிட்ட உங்களது கோரிக்கை கடிதத்தையும் உடன் வைத்துக் கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

9. **பரீட்சைக்கு அனுமதி**.- (அ) விண்ணப்பங்களை அனுப்பிய யாவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளருக்கு தனது அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தி தனக்குக் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். எல்லாப் பரீட்சார்த்திகளும் தாம் பரீட்சைக்கு தோற்றும் மண்டபத்திற்குரிய அனுமதி அட்டையில் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்டு பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே அம்மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சார்த்திகள் யாவரும் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளின் தொகுதியொன்று இவ் வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் சட்டத்திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்ட விதிகளை மீறும் பரீட்சார்த்திகள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாவதற்கு நேரிடும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டமை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாகக் கொள்ளவியலாது.

10. **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்**.- பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இதற்காகப் பின்வரும் சாதனங்களில் யாதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

11. **பொய்யான தகவல்கள் வழங்குதலுக்கான தண்டனை**.- பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் பொழுதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எக்கட்டத்திலும் அவரின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் அளித்த விபரங்களில் எவையேனும் அவரின் அறிவுக்கு எட்டிய அளவில் பொய்யானவை யெனக் காணப்படின் அல்லது அவர் ஏதேனுமொரு முக்கியமான விடயத்தை வேண்டுமென்று மறைத்திருந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

12. இவ்வொழுங்கு விதிகளால் ஏற்பாடு செய்யப்படாத எவையேனும் விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின்/ அமைச்சரவையின் அறிவுறுத்துரைகளுக்கு அமைவாக செயலாளர் தீர்மானிக்கின்றபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **பரீட்சை முறையும் பரீட்சை மொழியும்** :-

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி தகைமைப் பெற்ற பல்கலைக்கழக பட்டத்தை எம் மொழி மூலம் எழுதிச் சித்தியடைந்தாரோ அம்மொழி மூலம் அல்லது அரச கருமமொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(இ) பரீட்சார்த்தியொருவர் தகைமை பெற்ற பல்கலைக்கழக பட்டத்தில் பாடங்களை இரண்டு மொழிகளிலோ அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளின் மூலமாகவோ சித்தியடைந்திருப்பின், அந்தப் பல்கலைக்கழக பட்டத்தில் அவர் சித்தியடைந்த பாடங்களில் கூடிய தொகைக்கு விடையெழுதிய மொழி மூலமாகவோ அல்லது அரச கரும மொழியொன்றின் மூலமாகவோ பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(ஈ) பிரதான பாடத்தை ஒரு மொழியிலும் துணைப் பாடத்தை இன்னுமொரு மொழியிலும் எழுதிச் சித்தியடைந்திருக்கும் சிறப்புப் பட்டம் பெற்ற பரீட்சார்த்தி ஒருவர், அவர் பிரதான பாடத்திற்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச

கருமமொழியொன்றின் மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

**குறிப்பு :**

(i) மேற்போந்த (ஆ), (இ) என்பவற்றில் பிரயோகிக்கப்பட்ட "தகைமை பெற்ற பல்கலைக்கழக பட்டம்" எனும் சொற்றொடர் 6 (ii) பந்தியில் குறிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டங்களின் தகைமையை குறிக்கும்.

(ii) பரீட்சார்த்தி பரீட்சையில் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் மட்டும் விடை எழுத வேண்டும்.

(iii) பரீட்சார்த்தியொருவர் தனது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழியை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

14. **தெரிவு செய்யும் முறை:** பின்வரும் பாடங்களைக் கொண்ட ஒரு எழுத்துப் பரீட்சை

(i) பொது விவேகம் (1 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்

(ii) கட்டுரையும் சுருக்கமும் (2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

(iii) பொது அறிவு (2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

(iv) முகாமைத்துவ உளச்சார்பு (2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

பரீட்சார்த்திகள் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

**வாய்மொழித் தேர்வு (25 புள்ளிகள்).**- எழுத்துப் பரீட்சையில் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரர்களுள் தகைமை பெற்றவர்கள் வாய்மொழித் தேர்வுக்காக அழைக்கப்படுவர். ஒவ்வொரு வினாத்தாளிலும் 40 வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்களும் அரசாங்க சேவை ஆணைக்குழுவால்/ அமைச்சரவையால் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு போதுமான தென விதித்துரைக்கப்படுகின்ற உயர்மட்ட மொத்தப் புள்ளிகளைப் பெற்றவர்களுமான பரீட்சார்த்திகள் மட்டும் நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்படுவர். மேற்கூறப்பட்ட தகைமைகளைப் பெறுகின்ற பரீட்சார்த்திகள் போதிய அளவு இருப்பார்களாயின் வெற்றிட எண்ணிக்கையைப் போல் இரு மடங்கான பரீட்சார்த்திகள் வாய்மொழித் தேர்வுக்காக அழைக்கப்படுவர். (புள்ளிகள் வழங்கும் முறை நியமன அதிகாரியால்/அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்பில் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படும்.)

15. எழுத்துப் பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றிய விண்ணப்பதாரிகளில் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளை திறமை ஒழுங்கின் படி நியமனம் செய்வதற்கு தெரிவு செய்யப்படும். (நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுதலானது நியமனம் வழங்குவதற்கான தகைமையாக கருதுதல் ஆகாது.)

16. நியமனம் செய்யப்படும் எண்ணிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவால் /அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படும்.

17. **பாடத்திட்டம்.**- (i) பொது விவேகம்.- (1 மணித்தியாலயம் - 100 புள்ளிகள்) சொற்கள், எண்கள் மற்றும் உருவ வடிவில் தரப்படும் பிரச்சினைகள் தொடர்பிலான பரீட்சார்த்தியின் தீர்மானங்களையும் பதிலளிப்புக்களையும் சோதிப்பதன் மூலம் அவற்றை கிரகிப்பதில் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்திக் கூர்மையையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படும்.

(ii) கட்டுரையும் சுருக்கமும் (2 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்) தரப்பட்ட தலைப்புக்கள்/தொனிப்பொருட்கள் பலவற்றில் இருந்து பரீட்சார்த்தி தானாகவே தெரிவு செய்துகொள்ளும் தலையங்கங்கள்/ தொனிப்பொருள்கள் ஊடாக கருத்துக்களையும் தகவல்களையும் சமர்ப்பித்தல், ஒன்று திரட்டல் மற்றும் பரப்புதல் என்பவற்றில் பரீட்சார்த்திக்கு உள்ள தர்க்க ரீதியான சிந்தனை சக்தியை அளவிடுதலும் ஓரளவு சிக்கலான பந்தியொன்றை, எழுத்தாவணம் ஒன்றை அல்லது நிரூபமொன்றை ஊகித்துணர்ந்து அதன் முக்கிய கருத்துக்களை தனது சொல்லில் சுருக்கி சரியாகவும் தெளிவாகவும் கருத்துக்களை தெரிவிப்பதில் அவருக்கு உள்ள ஆற்றலை அளவிடுதலும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

(iii) பொது அறிவு (2 மணித்தியாலம் - 100 புள்ளிகள்) தேசிய ரீதியிலும் வலய ரீதியிலும் உலகில் பல அமைப்புச் சுற்றாடல்களினுள் போன்று எமது சமூகத்தில் நிலவுகின்ற சமூக, கலாச்சார, கல்வி, விஞ்ஞான, அரசியல், பொருளாதார மற்றும் ஏனைய காரணிகள் தொடர்பில் பரீட்சார்த்தி அடைந்துள்ள அறிவையும் புரிந்துணர்வையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

(iv) முகாமைத்துவ உளச்சார்பு (2 மணித்தியாலம் - 100 புள்ளிகள்) பிரச்சினைகளையும் அவற்றிற்கான காரணங்களையும் இனம் காணுதல், தீர்மானமெடுத்தல், நபர்களுக்கிடையிலான தொடர்புகளை நடாத்திச் செல்லுதல், தொடர்புத் துறைகளிலான திறமை, சுய ஒழுக்கம் கொள்கை மற்றும் உபாய வழிமுறைகளை தயாரித்தல் ஆகிய வகையில் பரீட்சார்த்தி ஒருவரிடம் உள்ள சிறந்த முகாமைத்துவ திறமைகளை அவரிடம் முன்வைக்கப்படும் சம்பவங்கள் மற்றும் சந்தர்ப்பங்களை ஆதாரமாகக் கொண்டு நிர்ணயிப்பது இதன் மூலம் எதிர் பார்க்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளைப் படி,

டி. திசாநாயக்க,
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2009, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

**இலங்கை நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2009**

**Open Competitive Examination for Recruitment to the Sri Lanka Administrative Service - 2009**

| | |
|---|---|
| 1.0 மொழி மூலம் :<br>பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :<br>சிங்களம் - 2<br>தமிழ் - 3<br>ஆங்கிலம் - 4<br>(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்) | 2.0 நகரம் :<br>பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரம்<br>நகர இ லக்கம்<br>பரீட்சை அறிவித்தலின் பந்தி இலக்கம் 01 இன்படி நகரத்தை பின்னராக மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. |

3.0 தனிப்பட்ட தகவல்கள் .-

3.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : -----.

உதாரணம் : SILVA, A. B.

3.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

3.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

3.4 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) (அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அஞ்சலிடப்படும்) :-----.

3.5 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

3.6 பால் : (ஆண் - 0, பெண் - 1) : - (உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.7 திருமணமானவரா? திருமணமாகாதவரா? (திருமணமாகாதவர் -1, திருமணமானவர் - 2) :- - (உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.8 இனத்தொகுதி : (சிங்களம் -1/தமிழ் - 2/இந்தியத் தமிழ் - 3/ முஸ்லிம் - 4/வேறு - 5) :- - (உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.9 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

3.10 பிறந்த திகதி : ஆண்டு : | | | | | மாதம்: | | | திகதி : | | |

3.11விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதியில் வயது :

ஆண்டு : | | | மாதம் : | | | திகதி : | | |

4.0 இலங்கை நிருவாக சேவைக்கு நியமனம் செய்வதற்காக இதற்கு முன் நடாத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டுகளைக் குறிப்பிடவும்).

(அ) -----.
(ஆ) -----.
(இ) -----.

5.0 (i) பல்கலைக்கழக பட்டம் பெற்ற திகதி :-----.
(இத்தகைமைகள் உள்ளனவா என்பதைப் பார்ப்பதற்காகத் தயவு செய்து அறிவித்தலின் 6 (11) ஐ நன்றாக வாசிக்கவும்.
(ii) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.
(iii) பதிவு இலக்கம் :----.
(iv) வெளிவாரி/ உள்வாரி :----.
(v) பட்டம் :----.
(vi) பாடங்கள் :----.
(vii) வகுப்பு :----.
(viii) மேல்தரம்/குறைந்த :----.
(ix) சுட்டெண் :----.
(x) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் :----.

6.0 பணம் செலுத்திய பற்றுச்சீட்டை நன்கு இதில் ஒட்டிவிடவும் :

| |
|---|
| (பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டிவிடவும்.)<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுள்ளதாகும்) |

7.0 **பரீட்சார்த்தியின் உறுதியுரை**.- இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை என்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ............... ஆம் இலக்க ........... ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் உறுதியுரைக்கின்றேன். மேலும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகி நடப்பேன் எனவும் இப்பரீட்சை நிபந்தனைகளின் படி நான் தகுதியற்றவரெனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீடசையின் பினன்ரோ எனது பரீட்சார்த்தி தன்மையை இரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிவேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

8.0 **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

(வர்த்தமானி அறிவித்தலின் 8(ஈ) இன் பிரகாரம் இருத்தல் வேண்டும்.)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற ................ (முழுப்பெயர்) என்பவர் எனக்கு நன்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும் குறித்த பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் ............ ஆந் திகதி அவர் என் முன்னிலையில்

கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப்பெயர்பெயர் :-----.
பதவி :-----.
(அலுவலக முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)
முகவரி :-----.
திகதி :-----.

10-634

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.